**செ. கு. எண்: 044** **நாள்: 10.03.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 13.3.2018

ஈரோடு மாவட்டம், **குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து** கோபிசெட்டிபாளையம் வட்டத்திலுள்ள பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, ஈரோடு மாவட்டம், குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து கோபிசெட்டிபாளையம் வட்டத்திலுள்ள புதிய பாசனப் பகுதிகளுக்கு **15.3.2018 முதல் 20.5.2018 வரை** சுழற்சி முறையில் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டத்திலுள்ள **2,498 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**